DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திங்கள்கிழமை 24ம் நாள் சாட்சியாகிய வேலாயுதம் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. சாந்தி, தலைமை எழுத்தர், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலாயுதம் | வயது | 44 |
| த/பெ. | குப்பன் | இனம் | ஆண் |
| கிராமம் | செய்யூர் | தொழில் | கூலி வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.97/2022**

( 1முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் .)

**<u>முதல் விசாரணை 24.02.2025 அ.சா.5</u>**

1. நான் செய்யூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 தரணி எனது ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளும் எனது ஊரை சேர்ந்தவர்கள். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>**

2. 17.06.2019ம் தேதி காலை 09.30 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய குற்ற எண்.505/2019 வழக்கில் உதவி ஆய்வாளர் என் முன்னிலையிலும், இளவரசன் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் இல்லை.

3. போலீஸ் விசாரணையில் சாட்சியாக பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாக தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/–K.Ramkumar.,M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam